செ.வெ.எண்:17 நாள்:08.04.2016

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், கல்லங்குறிச்சி கிராமத்தில் அமைந்துள்ள **அருள்மிகு கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோயில் தேர்த்திருவிழாவினை** முன்னிட்டு வருகிற 13.04.2017 (வியாழக்கிழமை) அன்று அரியலூர் மாவட்டத்தில் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் **உள்ளூர் விடுமுறை** என அறிவிக்கப்படுகிறது. அரியலூர் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு அரசின் கட்டுபாட்டில் உள்ள அனைத்துக் கல்வி நிலையங்களுக்கும் மற்றும் அரசு அலுவலகங்களுக்கும் இது பொருந்தும், இருப்பினும் இந்த உள்ளூர் விடுமுறையானது தமிழ்நாடு அரசு பள்ளித்தேர்வுத்துறை நடத்தும் பள்ளி இறுதி வகுப்பு அரசு தேர்வுகளுக்கு (மெட்ரிக், ஆங்கிலோ இண்டியன் பள்ளித்தேர்வுகள் உட்பட) பொருந்தாது. அவை ஏற்கனவே அரசால் அறிவிக்கப்பட்ட நாளில் நடைபெறும்.

எனவே, 13.04.2017 (வியாழக்கிழமை) அன்று உள்ளூர் விடுமுறை அனுசரிப்பதால், அதனை ஈடுசெய்யும் பொருட்டு, 22.04.2017 (சனிக்கிழமை) அன்று வேலை நாள் எனவும் அறிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.